**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.2/2024**
**Sessions :**
**Deposition of Witness for : PW1**

| | |
|---|---|
| Name | : திரு.சிவராஜ் |
| Father's/Husband Name | : திரு.சண்முகம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 25th day of February, 2026**

1, 2 மற்றும் 6 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள். மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. U/s.355 of BNSS மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது வீட்டிற்கும் அணைக்கட்டு காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரு கிலோமீட்டர் தூரம் இருக்கும். எதிரி முருகேசனும், எனது தந்தையும் அண்ணன், தம்பி என்றால் சரிதான். எனது தந்தையும், எதிரி முருகேசனும் வீட்டு மனை தொடர்பாக பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். புஞ்சை சர்வே எண்.146/9ஏ தற்போது வரை கூட்டுப்பட்டாவில் உள்ளது என்றால் சரிதான். கிணற்று பாகம் பிழையாக உள்ளதால் கூட்டுப்பட்டாவில் உள்ளது.

2. புல வரைபடத்திலும் சொத்து தனித்தனியாக பிரித்து காட்டப்படவில்லை என்றால் முன்பு சொத்து சர்வே எண்.146 என்று தான் இருந்தது. தற்போது இந்த பிரச்சனைக்கு பிறகு சர்வே எண்.146/9 ஏ, 9 பி என பிரிந்துவிட்டது. பிரச்சனைக்கு பிறகு சொத்து பிரிந்துவிட்டது என்றால் சரியல்ல. சொத்து தொடர்பான வீட்டு வரி ரசீது , இ.பி. ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சொத்தில் வீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.146/9 ஏ வை சுற்றி வீடுகள் உள்ளதா என்றால் என் வீடும், எனது அண்ணனின் வீடும் தான் உள்ளது. அந்த நிலத்தில் வேறு என்ன உள்ளது என்றால் எனது வீடும், கிணறும் உள்ளது.

3. என் அப்பா சண்முகத்திற்கு எந்த பகுதியில் பாகம் விடப்பட்டுள்ளது என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பிரச்சனை வந்தபிறகு தான் நிலத்தை பிரித்தோம். 24.2.2022 அன்று செய்யூர் வட்டாட்சியருக்கு படிக்கட்டிய ரசீதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரசீது என் வசம் உள்ளது. தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். படிக்கட்டிய பிறகு சர்வேயர் வந்து அளந்தாரா என்றால் அளந்தார். ஆனால் எவ்வளவு இம் உள்ளது என்று எங்களுக்கு சரியான பதில் சொல்லவில்லை. அதன்பிறகு நாங்கள் மேல்நடவடிக்கை எடுத்தோமா என்றால் எதிரிகள் மேல்நடவடிக்கை எடுக்கவிடவில்லை.

4. நான் சொல்வது போல் சர்வேயருக்கு படியும் கட்டவில்லை, சர்வேயர் வந்து சொத்தையும் அளக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான்

படிக்கட்டி இருந்தால் மேல்நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. 02.03.2022 தேதியிட்ட புகாரில் எந்த சொத்தில் பிரச்சனை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 27.2.2022, 28.02.2022 ஆகிய தேதிகளில் எத்தனை மணிக்கு பிரச்சனை நடந்தததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அந்த இரண்டு நாள் முழுவதும் பிரச்சனை நடந்தது. அந்த இரண்டு நாள் முழுவதும் பிரச்சனை நடந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி புகாரில் ஜே.சி.பி. எண்ணை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. மேற்படி புகார் மூன்று நாள் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றாலும் அந்த காலதாமதத்திற்கான காரணத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, அப்போது நாங்கள் அங்கு இல்லை. நான் சொல்வது போல் 27.2.2022 மற்றும் 28.02.2022 தேதிகளில் சம்பவம் நடந்திருந்தால் அந்த தேதியிலேயே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 02.03.2022 தேதியிட்ட புகாருக்கு புகார் ஏற்பு ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் காவல் நிலையத்தில் புகார் ஏற்பு ரசீது தரவில்லை.

6. 03.03.2022 தேதியில் எனது மனைவி ஒரு புகார் கொடுத்ததற்கும், புகார் ஏற்பு ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கும் காவல் நிலையத்தில் புகார் ஏற்பு ரசீது தரவில்லை. விபத்து பதிவேட்டில் சம்பவ நேரம், என்னை எத்தனை நபர்கள் தாக்கினார்கள் என்ன காயம் ஏற்பட்டது போன்ற எந்த விபரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனது அண்ணனின் விபத்து பதிவேட்டிலும் மேலே கண்ட எந்த விவரமும் குறிப்பிடவில்லை

என்றால் சரியல்ல. மேலும் எனது அண்ணனின் விபத்து பதிவேட்டில் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான நேரம் கூட குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்துறை, உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியதாக கூறப்படும் புகாரின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த மனு என்னிடம் தான் உள்ளது தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். அந்த மனுவை தாக்கல் செய்தால் தான் நான் தாக்கல் செய்த ஒப்புகை அட்டைகள் எதற்காக கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவரும் என்றால் சரியல்ல.

7. 27, 28 ஆகிய தேதிகளில் இரண்டு மாடுகள் இறந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இறந்த மாடுகளுக்கு பிரேத பரிசோதனை செய்தேனா என்றால் இல்லை. இறந்த மாடுகளின் புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரும்பு ஷீட் போட்ட மாட்டுக்கொட்டகைக்கான ரசீதுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. மாடு இறந்துபோன தகவலை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே மாடு இறந்திருந்தால் அதை பற்றி புகாரில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

8. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் எல்லாம் போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும் பவுஞ்சூல் அரசு மருத்துவமனைக் எவ்வளவு தூரம் என்றால் சுமார் ஒரு கிலோமீட்டர் இருக்கும். சர்வே எண்.146/9 சி எதிரிகளுக்கு சொந்தமான இடம் என்றால் அது பிரச்சனைக்கு பிறகு தான் பிரிந்தது. பிரச்சனைக்கு முன்பு வரை சர்வே எண்.146/9 சி பிரிப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சர்வே

எண்.146/9 ஏ எங்களுக்கு தனிப்பட்ட பாத்தியமானது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகாரில் சொல்லியுள்ளது போல் பாகம் எதுவும் பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தான் பாகம் பிரியாத சொத்தை அபகரிக்கவேண்டும் என்று பொய்யான புகாரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களின் தனிப்பட்ட சொத்து என்பதை நிரூபணம் செய்ய ஆவணம் இல்லாததால் தற்போது வரை உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் புகார் கொடுத்ததால் தான் காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிகளுக்கும் இடையேயான உரிமையியல் பிரச்சனைக்கும் நான் தேவையில்லாமல் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் தாக்கல் செய்த புகார் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. புகாரில் உள்ள பட்டியல் சாட்சிகள் 7 முதல் 9 வரையானவர்கள் எனக்கு தெரிந்த நபர்கள் என்றால் சரிதான்.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது)**

**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-Tmt.N.Valliamma
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur (FAC)